நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை
தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 3
தொகுதி: 114
திருவள்ளுவர் ஆண்டு 2051

திங்கள் இதழ்
விலை: ரூ.20
மார்ச்- 2020

வள்ளல் பாண்டித்துரைத் தேவர்
1867-1911

மன்னர் பாசுகர சேதுபதி
1868-1903

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன்	துணைத் தலைவர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	செயலாளர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	உறுப்பினர்
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
பேராசிரியர் இரா. சதாசிவம்	உறுப்பினர்
வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன்	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
வழக்குரைஞர் ச.தசரதராமன்	உறுப்பினர்
திரு. துரை கருணாநிதி	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் ச.தசரதராமன்	தலைவர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	செயலாளர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்
வழக்குரைஞர் து.மாயராசன்	உறுப்பினர்
வழக்குரைஞர் சு.சிவசாமி	உறுப்பினர்
பொறிஞர் லெ.சிவக்குமார்	உறுப்பினர்
வழக்குரைஞர் ஆர்.பாலாஜி	உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம்	உறுப்பினர்
முனைவர். ம.லெல்லிஸ்திவாகர் பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். கி.வேணுகா முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். கோ.சுப்புலெட்சுமி துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். பா.நேருஜி உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. **இதழ் மணம்** - பேராசிரியர் இரா. சதாசிவம் 4

2. **சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா** 7
- முதுமுனைவர் இரா. இளங்குமரனார்

3. **திருமூலர் கூறும் தமிழ் மந்திரங்கள்**
- பேராசிரியர் ப. மருதநாயகம் 9

4. **செம்மொழித் தமிழில் சீரிய ஆய்வுகள் (நான்கு தொகுதி)** - பேராசிரியர். அ. பிச்சை 32

5. **சங்கச் செய்திகள்** 36

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ.200	ரூ.1,000
ஆயுள் கட்டணம்	ரூ.3,000	ரூ.10,000
புரவலர் கட்டணம்	ரூ.10,000	ரூ.20,000
தனி இதழ்க் கட்டணம்	ரூ.20	

இதழ் மணம்

பேராசிரியர் இரா.சதாசிவம்

குப்பைக் கோழியார்: பேராசிரியர் இரா.இளங்குமரன்: குறுந்தொகையில் **305வது** பாடலாக குப்பைக்கோழி உவமையாக அமைந்த பாடல் இடம்பெறுகிறது. குப்பைக்கோழி தனிமையில் சண்டையிட்டு அழிந்துபடுகிறது. வாழ்க்கையில் பலர் பேணுவாரின்றி வாழ்க்கைப்போரில் சிதைந்து போகின்றனர். வாழ்க்கை பாதுகாப்பின்றிப் போகையில் **"ஆள்வார் இலிமாடானேன்"** என்பார் பெரியவர்.

சங்ககாலத்தில் இந்தச் செய்தி குப்பைக்கோழி தனிப்போர்போல என விளக்கப்படுகிறது. சங்க காலத்தில் பெண்ணின் காதல் போரை விளக்க ஆசிரியர் கையாளும் உவமை இது. பின்னது சமுதாய வாழ்க்கையில் சிதைந்து போனவர் வாழ்க்கையை விளக்க எடுத்தாண்டது. இரண்டு உவமைகளும் சுற்றமும் நட்பும் இயையின் வாழ்க்கை சிறக்கிறது என்பதை விளக்கும் உண்மையாகும்.

குறுந்தொகையைத் தொகுத்த சான்றோர் உவமையின் அருமை கருதி பாடலாசிரியரைக் குப்பைக் கோழியார் என அழைத்தது படிப்பவர் மனத்தில் உண்மையைப் புரிய வைக்கக் கருதும் முயற்சியாக இருக்கவும் கூடும்; படிப்பவர்க்கு காதலைப் போற்ற வேண்டும் என்ற எண்ணத்தை ஊட்டும் முயற்சியாகவும் இருக்கும்; காதல் போயின் பின் சாதல் சாதல் சாதல் என்ற பாரதியின் கவிதையைக் குப்பைக் கோழியார் நினைவுறுத்துகிறார், குப்பைக்கோழியார் வாழ்க! மூத்தபேராசிரியர் இளங்குமரனார் வாழ்க!

திருமூலர் கூறும் தமிழ் மந்திரங்கள் : பேராசிரியர் ப. மருதநாயகம்

திருமூலர் பக்தி இயக்கத்திற்குத் தோற்றுவாய் செய்த நிறைமொழி மாந்தர் இனத்தின் முதல்வர்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

தமிழ் என்ற சொல் திருமூலருக்கு மூலமும் முதலுமாகும். அவருக்குப் பின் வந்தவர்களும் "சொற்றமிழ் பாடுக என்றான் தூமறை பாடும் வாயால்" எனத்தமிழ் முழக்கமிட்டனர்.

மணவாள மாமுனிகள் தென்கலைத்தமிழ் செழிக்க எடுத்தமுயற்சி இன்றும் நீதிமன்றவளாகத்தில் நீதிக்காகக் காத்திருந்து அண்மையில் நீதிமன்ற எச்சரிக்கையும் நிர்வாகத்திற்கு விடப்பட்டது; இதனைச் சில நாட்களுக்கு முன்பு செய்தி ஏடுகள் பறைசாற்றின.

தமிழ் மந்திரத்தை அந்தாதியில் நூலாக வடித்தவர் திருமூலர். அதனைப்பின் வந்தவர்கள் தம் அறியாமையால் இடைச் செருகலால் முன்னுக்குப்பின் முரணான செய்திகளை எழுதி திருமந்திரத்தைக் குழப்பிவிட்டனர்.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்னும் மகாவாக்கியத்தைப் படைத்தவர் திருமூலர் எனக் கட்டுரை

ஆசிரியர் குறிப்பிடுவது நினைவில் கொள்ளத்தக்கது. தமிழ் தாய்மொழி; தடையின்றி மெய்ப்பொருளை உணர்வதற்குத் தாய்மொழி வேண்டும். அதனை உணர்ந்த திருமூலர் தமிழ் என்றே தம் படைப்பைக் குறிப்பிடுவதும் தாம் உலகம் தழுவிய ஒட்பம் உடையவர் என்பதை **"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"** என்னும் மகா வாக்கியத்தால் உணர்த்தும் செய்தியும் உலகம் உணர்ந்து போற்றுதற்குரிய உண்மை.

ஆசிரியருடைய கட்டுரையின் ஒவ்வொரு தொடரும் திருமந்திரத்தை உள்வாங்கிக் கொள்வதற்குரிய செய்தித்தொகுப்பாகவும் பிற நாட்டு நல்லறிஞர் கருத்துக்கள் அரண்செய்வதையும் ஆசிரியர் சுட்டிக்காட்டி திருமந்திரம் சமயநூலாக மட்டும் இல்லாமல் வாழ்க்கை நூலாகவும் உலகம் தழுவிய வாழ்வுக்குரிய சமயம் கடந்த நூலாகவும் அமைந்திருப்பதை எடுத்துரைத்திருக்கும் கட்டுரை அருமைப்பாடுடையதும் படித்து இன்புறத்தக்கதுமாகும்.

இந்த இதழில் பேராசிரியர் அ.பிச்சை எழுதிய, **"செம்மொழித் தமிழில் சீரிய ஆய்வுகள்"** என்னும் நான்கு தொகுதிகள் குறித்த ஆய்வுரை இடம் பெறுகிறது. மதுரை நான்காம் தமிழ்ச்சங்கப் பாண்டியன் நூலகத்திற்கும் பேராசிரியர் நான்கு தொகுதிகளையும் வழங்கியுள்ளார். மாணவர் ஆசிரியர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா

10. குப்பைக் கோழியார்

- முதுமுனைவர் இரா.இளங்குமரனார்

சிற்றூர்களில் அவரவர்க்குக் குப்பை உண்டு. அக்குப்பை, வயல் நில வளமாகும்.

வீடுகளில், பெரும்பாலோர் கோழிவளர்ப்பாரும் உண்டு. ஊன் உண்ணார் அவ்வாறு வளர்க்கமாட்டார். கோழிகளை வீட்டுக்குள்ளேயே அடைத்து வைப்பதில்லை. தெருவில் உலவும் குப்பையில் கிளறும்; கூரையிலும் சேவல் ஏறும்.

கோழி பொதுப்பெயர். சேவற்கோழி, பெட்டைக் கோழி என வழங்கப்படுவன. பெட்டைப் கோழி, குஞ்சுகளுடன் திரியும்; கிண்டிக்கிளறித் தீனி உண்ணக் குஞ்சுகளுக்கு வழிகாட்டும். பருந்து வந்தால் சிறகுள் வைத்துப் பாதுகாக்கும். அவ்வாறு பாதுகாக்க அமைக்கப்பட்டதே பழங்காலச் சிறைகள். சிறகு > சிறை சேவல் கோழி கூவும்; கொக்கரிக்கும்; சண்டை போடச் சலியாது. அதனால், பல சிற்றூர்களில் சேவல்களின் கால்களில் கத்திகட்டி விட்டு, **சேவற்கட்டு** எனச் சூதாட்டம் நடந்தது. அதனை ஏவி விடுவார்; தோல்வி வெற்றி கண்டு பிரித்தும் விடுவார். அப்போர்க்கென்றே வளர்க்கப்படுபவை அவை. இங்கே குறிக்கப்படும் கோழி - குப்பைக்கோழி - தடுப்பதற்கு - விலக்குதற்கு - எவரும் இல்லாமல் போரிடும் கோழி எவரும் விலக்காமல் சாவும் நிலைக்கும் ஆட்படும். அல்லது தன் உயிரைக் காக்க அஞ்சி ஓடும். தனக்குத்தானே உண்டாக்கிக் கொண்ட துயரைத் தணிப்பார் எவரும் இல்லாமல், குப்பைக் கோழி சண்டையிட்டுச் சாவது போல் சாவத்தான் என் நிலை ஆகும் என்று தானே கூறுவதாக அமைந்ததொரு பாட்டு, **"குப்பைக் கோழித் தனிப்போர் போல"** என உவமைத் தொடராக வருவது கொண்டு அதனைப் பாடியவர் குப்பைக் கோழியார் எனப்பட்டார் என்க.

கண்தர வந்த காம ஒள்ளெரி
என்புற நலியினும் அவரொடு பேணிச்
சென்றுநா முயங்கற்கு **அருங்காட் சியமே**
வந்துஅஞர் களைதலை அவர்ஆற் றலரே
உய்த்தனர் விடாஅர் பிரித்திடை களையார்
குப்பைக் கோழித் தனிப்போர் போல
விளிவாங்கு விளியின் அல்லது
களைவோர் இலையான் உற்ற நோயே. குறுந். 305

இது, "காப்பு மிகுதிக்கண், தோழி அறத்தொடு நிற்பாளாக தனது ஆற்றாமை தோன்றத் தலைமகள் தன்னுள்ளே சொல்லியது" என்னும் கூற்று வகையது.

பொருள்

"கண்ணால் கண்டதால் வந்து பற்றிய காமக்கடு நெருப்பு, உடலை எவ்வளவு நலியச் செய்தாலும் அவரை நெருங்கிச் சென்று கூறாமையால் கூடுதற்கு அரிய நிலை ஆயிற்று. அவரும் வந்து துயர் களைந்திலர்; பிறர் ஏவாமல், தடுப்பாரும் இல்லாமல் போரிட்டு அழியும் குப்பைக் கோழி போல இறந்து போதலன்றி என் துயரைக் களைவார் இல்லை" என்பது இதன்பொருள். இதன் பயன் தோழி இதனைச் செவிலிக்கு உரைத்து, அவள் நற்றாய்க்கு உரைத்து மணங்கொள்ள வகை செய்ய வேண்டும் என்பதாம். இது, **அறத்தொடு நிற்கத் தோழியைத் தூண்டியதாம்.**

அரும்பொருள்: முயங்கல்-தழுவல்; அருங்காட்சியர் - காணற்கு அரியர்; அஞர்-துன்பம்; உய்த்தல்-ஏவுதல்; களைதல்-நீக்குதல்; விளிதல்-இறத்தல்; நோய்-துயர்; திருக்குறளில் கணவிதுப்பழிதல் என்பதோர் அதிகாரம். இதன் முன்னிரண்டடிகளின் பெருவிளக்கமாவது அவ்வதிகாரமாம் (112) **அருங்காட்சி** என்பது காணுதற்கு அரிய பொருள்களை எல்லாம் தொகுத்து வைத்துள்ள இடத்தைக் குறிப்பதற்கு உரியதாகிய **'அருங்காட்சியகம்'** என்னும் அருமைக் கலைச் சொல்லை வழங்குகின்ற அருமையதாகின்றதல்லவா.

திருமூலர் கூறும் தமிழ் மந்திரங்கள்

பேரா. ப.மருதநாயகம்,
ஆய்வறிஞர் (ஓய்வு),
நடுவண் அரசு செவ்வியல்
தமிழ் நிறுவனம்,
தரமணி, சென்னை -600113.
9442787727

(1)

திருமந்திரம் ஒன்பது பெரும்பிரிவுகளில் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது என்பது தவிர திருமூலரைப்பற்றிய கதைகளும் அவர் மூவாயிரம் ஆண்டுகளில் ஆண்டுக்கொன்றாக மூவாயிரம் பாடல்களைப் பாடினார் என்பதும் மூடநம்பிக்கைகள் என்று ஒதுக்கப்பட வேண்டியவை. ஆனால் திரு.வி.க.வின் முதற்பதிப்பில் 3047 பாடல்களும், பின்னர் வந்த பதிப்பில் 3069 பாடல்களும், திருப்பனந்தாள் மடத்துப்பதிப்பில் 3108 பாடல்களும், சைவசித்தாந்தக் கழகப் பதிப்பிலும் சிதம்பரனார் பதிப்பிலும் 3000 பாடல்களும் உள்ளன. திருமந்திரத்தில் ஏராளமான இடைச்செருகல்கள் நிகழ்ந்துள்ளன என்பதற்கு இது தவிர வேறு அகப்புறச் சான்றுகளும் உண்டு.

திருமந்திரத்தில் நாற்பத்தைந்து பாடல்கள் இரண்டு இலக்கங்களில் இடம்பெறுகின்றன. அவையாவன:

(1)106, 990; (2)108, 540; (3) 185, 863; (4) 236, 2536; (5) 331,1856; (6) 336,882; (7) 403, 438; (8) 406, 414; (9) 412, 2967; (10) 440, 2351; (11) 457, 2926; (12) 490, 2012; (13) 492,1771; (14) 504, 2175; (15) 587,1794; (16) 617, 2471; (17) 766, 2660; (18) 884, 2988; (19) 961, 1971; (20) 965, 2698; (21) 972, 1115; (22) 973,1213; (23) 975, 2503; (24) 1134,1528; (25) 1222, 1306; (26) 1452,1848; (27) 1458,1846; (28) 1460,2622; (29) 1478,1567; (30) 1492,1707; (31) 1586,1629;

(32) 1589,1782; (33) 1652,1869; (34) 1711, 2359; (35)1786, 2938; (36)1862, 2111; (37) 2016, 2903; (38) 2071, 2550; (39) 2093, 2559; (40) 2362, 2637; (41) 2441, 2473, 2826; (42) 2493, 2570; (43) 2498, 2572; (44) 2530, 2979; (45) 2597, 2845.

இவற்றுள் பல இடைச் செருகல்களாக இருத்தல் வேண்டும், கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ள 'ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை' என்று தொடங்கும் பாடல் இடைச்செருகல் என்பதில் ஐயமில்லை. தமிழகத்திற்கு விநாயகர் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் கொண்டுவரப்பட்டார் என்பதால் திருமந்திர நூலுக்குக் காலத்தால் இத்துதி மிகவும் பிந்தியதாகும்.

மூவாயிரம் பாடல்களில் 716 பாடல்கள் அந்தாதிப் பாடல்களாகும். திருமந்திரம் எழுதப்பெற்றபோது 3000 பாடல்களும் அந்தாதிப் பாடல்களாக இருந்திருக்க வேண்டும். அவற்றுள் பல பாடல்கள் நீக்கப்பெற்று, அந்தாதி அமைப்பைக் கருத்தில் கொள்ளாமல், ஏராளமான பாடல்கள் செருகப்பட்டிருக்க வேண்டும்.

திருமூலரின் காலத்தில் வழங்கியிராத சொற்களைக் கொண்ட பாடல்களெல்லாம் இடைச்செருகல்களே. அத்தகைய பாடல்கள் வருமாறு: ஆயிட்டு (2017), அதுக்கென்று (2950), சுட்டிட்டு (145), செத்திட்டு (121), அப்புறம் (55), கிரீம் (1344), ரூபம் (1305), சடகோணம் (1311), ரீங்காரம் (1314), பன்னிரெண்டு (579), யாசுவாகா (1317), அர்ச்சனை (1369), அதாயிடும் (1330), அறுத்திட்டு (1383), போயிடும் (1413), அடைத்திட்டு (1812), புணர்ந்திட்டு (1812), துடக்கு (121), முடிந்திட்டு (673), மடிந்திட்டு (2876), அழுதிட்டு (145)

சந்தோடம் (557), பீசம்(105) இரேகை போன்ற சொற்கள் வடமொழி எழுத்துக்கள் நீக்கி எழுதப்பெற்றுள்ளன. ஆனால் 910, 1311, 1312, 1313, 1314, 1320, 1329, 1349, 1354, 1355, 1359, 1389 ஆகிய பாடல்களில் கிரந்த எழுத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இவையாவும் இடைச்செருகல்கள் என்பது தெளிவு.

'மகளிர்இழிவு' என்ற தலைப்பில் உள்ள கருத்து திருமூலர் கருத்தாக இருக்க முடியாததால் அது இடைச்செருகலே என்று அறிஞர் முடிவு செய்வர்.

'இலிங்கபுராணம்' என்ற பகுதியில் எட்டுப்பாடல்கள் உள்ளன. இவற்றிற்கும் தலைப்பிற்கும் தொடர்பின்மையால் இவையெட்டும் இடைச்செருகல்களே.

'திருமந்திர ஆராய்ச்சி' எனும் நூலில் இரா.மாணிக்கவாசகம் என்பார் இடைச்செருகல்கள் பற்றிக் கூறும் கருத்து எண்ணிப் பார்த்தற்குரியது.

திருமூலர் ஒன்பது ஆகமங்களின் பெயரைக் குறிக்கின்ற படியால் ஒன்பது தந்திரம் எனப்பிரித்தனர். திருமூலர் குறிக்கின்ற ஒன்பது ஆகமங்கள் கூறுகின்றனவற்றைத்தான் இவ்வொன்பது தந்திரங்கள் கூறுகின்றனவா என்பதைக் கூறுதல் இயலாது. ஏனெனில், அவை வெறும் பெயரளவிலேயே உள்ளன; நமக்குக் கிடைக்கவில்லை; கிடைப்பின் இவைபற்றிய தெளிவினை ஓரளவு பெறவியலும்.

ஆனால், ஆரம்பத்தில் திருமந்திரத்தைத் தொகுத்தவர்கள் ஏதேனும் ஓர் அடிப்படையிலேதான் தொகுத்திருக்க வேண்டும். திருமந்திரத்தில் பெருவாரியான சிதைவுகளும் இடைச்செருகல்களும் உள்ளமையால், அவ்வடிப்படை மேலும் ஆராயப்பட வேண்டியதாக உள்ளது. நூலின் பொதுவான அமைப்பை நோக்கும் போது, பத்துப் பாடல்களாகச் சில பகுதிகளும், முப்பது பாடல்களாகச் சில பகுதிகளும், நூறு பாடல்களாகச் சில பகுதிகளும் தொகுக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது தெளிவாகிறது. ஐந்துக்கும் குறைவாகக் காணப்படும் பாடல்களைச் சிதைவுற்ற பகுதிகளாகக் கருதலாம். எங்ஙனம் இருப்பினும் சுமார் எழுநூற்றுப்பதினாறு பாடல்கள் தொடர்ந்தும் விட்டுவிட்டும் அந்தாதிப் போக்கில் அமைந்துள்ளதால், இவர் அம்முறையிலேயே அனைத்துப் பாடல்களையும் இயற்றியிருத்தல் வேண்டும். எஞ்சியவை அவ்வப்போது இடைச் செருகலாக அமைந்திருக்கலாம். பயன்படுத்தப்பட்ட சொற்களைக் கொண்டும்,

அமைப்பைக் கொண்டும், நூற்றிப்பன்னிரெண்டு பாடல்களை அறிஞர் வி.வி.ரமணசாத்திரி இடைச்செருகல் என ஒதுக்குகின்றார். எவ்வாறாயினும் இந்த நூல் மறையாகவே (வேதமாகவே) இருந்து வந்தமையே இவ்விடைச்செருகல், சிதைவு முதலியவற்றுக்குக் காரணமாயிற்று என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

திருமந்திரத்தில் திருக்குறளின் செல்வாக்கைத் தெளிவாகக் காணலாம். திருக்குறளின் தலைப்புகளையும் கருத்துகளையும் அவர் எடுத்துக் கொண்டுள்ளமையைக் கீழ்க்கண்ட பட்டியலால் அறியலாம்.

1. யாக்கை நிலையாமை (பாடல்கள் 143-167)
2. செல்வம் நிலையாமை (168-176)
3. இளமை நிலையாமை (177-186)
4. உயிர் நிலையாமை (187-196)
5. கொல்லாமை (197,198)
6. புலான் மறுத்தல் (199, 200)
7. பிறன்மனை நயவாமை (201-203)
8. மகளிர் இழிவு (204-208)
9. நல்குரவு (209-213)
10. அரசாட்சிமுறை (238-247)
11. வானச்சிறப்பு (248, 249)
12. அறம் செய்வான்திறம் (251-259)
13. அறம் செய்யான் திறம் (260-269)
14. அன்புடைமை (270-279)
15. கல்வி (290-299)
16. கேள்வி (300-309)
17. கல்லாமை (310- 319)

18. நடுவுநிலைமை (320-323)

19. கள்ளுண்ணாமை (324-336)

20. துறவு (1614-1623)

21. தவம் (1624-1632)

22. அவவேடம் (1655-1660)

23. தவவேடம் (1661-1667)

24. அவா அறுத்தல் (2613-2622)

25. ஊழ் (2847-2852)

(சிறீக்கந்தராசா, திருமந்திரம் : ஓர் அறிமுகம்)

வள்ளுவர் குறள் வெண்பாக்களில் சொல்லியுள்ள கருத்துகளைச் சற்றே விரிவாக்கம் செய்து நாலடிகள் கொண்ட கலிவிருத்தப்பாக்களில் திருமூலர் தருகிறார்.

(2)

தென் தமிழகத்திலிருந்து இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் பரவிய பக்தி இயக்கத்தின் விடிவெள்ளியென்று கருதப்பெறும் திருமூலர் அவர்காலத்திய, நன்கு அறியப்பட்ட எச்சமயத்திற்கும் கடன்பட்டவர் அல்லர். வேதச்சார்புடையார், பௌத்தர்கள், சமணர்கள், பல வகைப்பட்ட பொருள் முதல்வாதிகள், முழுநாத்திகர்கள் ஆகிய யாவருடைய இறையியல் கோட்பாடுகளையும் ஆழ்ந்து பயின்று, தமக்கென ஒரு கொள்கையைத் தெரிந்தெடுத்துக்கொண்டு, அதனை ஆற்றல் மிக்க மொழியில் பரிந்துரை செய்தவர் அவர். சமய நூல் என்ற முறையில், திருமந்திரம் பல வகைகளில் தனித்தன்மை கொண்டது. அது எடுத்துரைக்கும் கருத்துக்களுக்கு வடமொழி இறையியல், சமய நூல்களையும், புராணங்களையும் போன்று, திருமந்திரம் பெரும்பாலும் தொன்மங்களையும் பழங்கதைகளையும் ஆதாரங்களாகக் காட்டுவதில்லை. இறைவனை அடைதற்கான ஆன்மீக வழிகள் பலவற்றை அது அடையாளம் காட்டுகிறது. அது

முன்வைக்கும் செய்தி எக்காலத்திற்கும் பொருந்துவது; எவ்விடத்தார்க்கும், எவ்வினத்தார்க்கும் ஏற்புடையது. மாந்த இனம் ஒன்றெனப்பதையும், இனம், சமயம், நாடு, மொழி, நிறம், வருணம், சாதி ஆகியவற்றின் அடிப்படையிலான பிரிவுகளும் வேறுபாடுகளும் பொருளற்றவை என்பதை வலியுறுத்துவதில் அது உலகின் பிற இன, சமய, இறையியல் கோட்பாட்டாளர்களுக்கெல்லாம் தக்க அறிவுரை கூறுவது; 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற 'மகாவாக்கியத்தால் பெருமை பெற்றது. அது கூறும் இறையியல் முழுமையானதென்றும் கடவுள் - மனித உறவு பற்றியும், இறைவனின் தன்மை பற்றியும் எழுப்பப்படும் எல்லா வினாக்களுக்கும் அது ஏற்புடைய விடைகள் தருகிறதென்றும் அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

இறையியல், சமயம், தத்துவம் ஆகியவற்றைக் கவிதையாக்குவதில் திருமந்திரம், மேலைமொழிகளிலும் வடமொழிகளிலும் உள்ள நூல்களையெல்லாம் விஞ்சி நிற்பது. யோகங்களை வருணிப்பதில் பதஞ்சலி முனிவரின் நூலைக் காட்டிலும் முழுமையும் தெளிவும் கொண்டது; சக்தியைப் போற்றுவதில் ஆதிசங்கரரின் சௌந்தர்ய லகரியினும் சொல்வளமும் பொருள் வளமும் பெற்றது. சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் இறைவனை அடையும் நான்கு வழிமுறைகளை எடுத்துரைப்பதில் பகவத்கீதையில் காணப்பெறும் உள்முரண்பாடுகளையும், குற்றங்குறைகளையும் திருமூலரின் நூலில் காண இயலாது. ஒன்பதாவது தந்திரத்தின் சூனிய சம்பாசனை பற்றிய விளக்கத்தில் அது கையாளும் குறியீடுகள் பிற சித்தர்களுக்கும், வங்கத்து 'பால்கவிஞர்' (Baul Bards) களுக்கும் வழி காட்டியிருக்க வேண்டும். சிவதரிசனம் பற்றியும் இறையோடு இணையும் இன்ப அனுபவம் பற்றியும் திருமந்திரத்தில் காணப்பெறும் பாடல்கள் தாந்தேயின் தெய்விக இன்பியல் நாடகம் (Divine Comedy) இறுதிப்பகுதியில் தரும் வருணனையோடு ஒப்பிட்டுப் பார்த்தற்குரியவை.

உயர்ந்த இலக்கியம் (great literature), நல்ல இலக்கியம் (good literature) ஆகிய இரண்டிற்குமுள்ள வேறுபாட்டைச்சுட்டும்

மேலைக்கவிஞரும், திறனாய்வாளருமாகிய டி.எஸ்.எலியட், உயர்ந்த இலக்கியத்தில் ஆன்மிகம், கவிதை, இசை ஆகிய மூன்றும் இணைகிறதென்றும், நல்ல இலக்கியம் முருகியல் இன்பம் தருவதோடு அமைகிறதென்றும், உயர்ந்த இலக்கியம் புலன்கள், உள்ளம், அறிவு, ஆன்மா, ஆகியவற்றை உள்ளடக்கிய முழு மனிதனிடமிருந்து பிறந்து, முழுமனிதனையும் தாக்கும் ஆற்றல் கொண்டதென்றும் விளக்குவார். திருமந்திரம் இத்தகைய உயர்ந்த இலக்கியத்திற்கு உயர்ந்த சான்று என்பதில் ஐயமில்லை.

திருமந்திரத்துப் பாடல்களைப் பயிலும் போதும் நாம் தாந்தேயின் தெய்விக இன்பியல் நாடகம் பற்றிக் கூறும் மதிப்பீட்டை நினைவுகூர்கிறோம். அதன் முதல்பகுதி (Inferno) சுருங்கிய சொற்களும், பொருள் பொதிந்த உருவகங்களும் கொண்ட எளிய இனிய நடையில் உயர்ந்த கவிதை எழுத முடியுமென்பதற்கு எடுத்துக்காட்டாகும்; இரண்டாம்பகுதி (Purgatorio), கருத்துகளைக் கருத்துகளாகவும், தத்துவத்தை தத்துவமாகவும் சொல்லுகின்ற வெளிப்படையான தத்துவக்கூற்று (Philosophical Statement) கவிதையாக முடியுமென்று நிறுவும். மூன்றாம் பகுதி (Paradiso), கிடைத்தற்கரிய இறையனுபவ நிலைகளும் கவிதையின் பாடுபொருளாகலாம் என்று புலப்படுத்தும். திருமந்திரம் அடிதோறும் நான்கு சீர்களைக் கொண்ட நான்கு அடிகளைக் கொண்ட பாடல்களில் பொருளை இழக்காத எதுகை மோனைகளால் சந்த இன்பத்தைத் தருகிறது. அதன் உவமைகளும், உருவகங்களும், காட்சியுருக்களும், குறியீடுகளும் நாம் நாளும் காணும் பொருள்களிலிருந்தும் நிகழ்வுகளிலிருந்தும் பெறப்பட்டவை. சில பாடல்கள் கருத்தைக்கருத்தாக உரைக்கும்போதும் முருகியல் இன்பம் தரத்தவறுவதில்லை. திருமந்திரத்தின் இறுதிப்பகுதி சிவனும் சீவனும் முற்றுமாக இணைந்து பெறும் இன்ப நிலையைப் புலப்படுத்துவதில் வெற்றி பெறுகிறது.

(3)

தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு, மரபு ஆகியவற்றைச் சிறப்பித்துப் பேசும்போது, தமிழினம் அதன் வாழ்க்கை நோக்கிற்கும்

இறையியல் நம்பிக்கைகளுக்கும் வேறு எந்த இனத்திற்கும் கடன்பட்டிருக்கவில்லை என்பதைத் திருமூலர் உறுதிப்படுத்துவார். இறைவனின் புகழைத் தமிழில் பாடுதற்கேற்றவாறு தனக்கு நற்பிறவியை அளித்துள்ளதாக அவனுக்கு நன்றி சொல்வார்.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே. (81)

திருமந்திரத்தின் மூவாயிரம் தமிழ்ப் பாடல்களை முறையாக ஓதுவார் நந்தியின் அருளால் இறைவனைச் சேர்தல் உறுதியென்று ஒரு பாடல் கூறும்.

மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்
ஞாலம் தலைவனை நண்ணுவ ரன்றே (99)

தெய்வங்களும், மாந்தரும் மந்திரங்களும் தமிழ் எழுத்துகளாலேயே அடையாளப்படுத்தப்பெறுவர். சீவனைப்பத்திக் குறிக்கும் 'ய' என்ற எழுத்தாலேயே திருமூலர் அழைப்பார்.

அந்த மில்லானுக்கு அகலிடம் தானில்லை
அந்த மில்லானை அளப்பவர் தாமில்லை
அந்த மில்லானுக்கு அடுத்த சொல்தானில்லை
அந்த மில்லானை அறிந்து கொள் பத்தே. (1031)
நந்தியே தமிழின் தாய் என்று போற்றப்படும்.
செந்தமிழ் ஆதி தெளிந்து வழிபடு
நந்தி இதனை நலமுறைத்தானே. (1089)

தன்னை அடைக்கலம் அடைவார்க்கு இன்சொல் கூறிப்பேணும் இறைவியையே தமிழ் மொழியென்றும் மூலர் சுட்டக் காணலாம்.

அஞ்சொல் மொழியாள் அருந்தவப் பெண்பிள்ளை
செஞ்சொல் மடமொழி சீருடைச் சேயிழை
தஞ்சமென் றெண்ணித்தன் சேவடி போற்றுவார்க்கு
இன்சொல் அளிக்கும் இறைவி என்றாரே. (1109)

'தமிழ்' என்ற சொல்லே சிவனென்ற பொருளில் பயன்படுத்தப்பெறும். ஞானம் என்பது ஐந்து மண்டலங்களுக்கு அப்பாற்பட்டது என்றெண்ணுதல் அறிவீனம்; ஏனெனில் தமிழ் மண்டலங்களே ஐந்து சிவ தத்துவங்களாகும்.

தமிழ் மண்டலம் ஐந்தும் தாவிய ஞானம்
உமிழ்வது போல உலகம் திரிவார்
அவிழு மனமும் எம்ஆதி அறிவும்
தமிழ் மண்டலம் ஐந்தும் தத்துவ மாமே (1646)

இயல், இசை, நாடகமென்னும் முத்தமிழின் நாதமானது தமிழ் எழுத்துகளிலேயே ஒலிக்கிறது.

முத்தியை ஞானத்தை முத்தமிழ் ஓசையை
எத்தனை காலமும் ஏத்துவர் ஈசனை
நெய்த்தலைப் பால்போல் நிமலனும் அங்குளன்
அத்தரு சோதி அது விரும்பாரே.

இறைவனே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு பண்களிலேயே குடிகொண்டுள்ளான்.

ஏழினில் ஏழாய் இகந்தெழுத்து ஏழதாய்
ஏழினில் ஒன்றாய் இழிந்தமைந்து ஒன்றாகி
ஏழினில் சன்மார்க்கம் எங்கள் பரஞ்சோதி
ஏழிசை நாடகத்தே இசைந்தானே. (2783)

(4)

வடநூலார் 'மகாவாக்கியங்கள்' என்றழைக்கும் ஒப்புயர்வற்ற அறக்கூற்றுகள் பல திருமந்திரத்தில் இடம் பெற்றிருக்கின்றன. தொல்காப்பியர்,

நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப

என்றும், திருவள்ளுவர்

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். (28)

என்றும் வரையறை செய்த மந்திர மொழிகள் பலவற்றைத் திருமந்திரம் தந்துள்ளது. மாந்த வாழ்விற்கு நல்வழிகாட்டும் ஆழ்ந்த உண்மைகள் உரிய உணர்வுச் சூழலில் அரிய சொற்களில் வெளிப்படக் காணலாம்.

தமிழ்முனிவர் தான் பெற்ற பேரின்பத்தைத் தனக்கென வைத்துக் கொள்ளாமல் உலகத்தாரோடு பகிர்ந்து கொள்ள விழைவார்.

யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே.

இப்பரந்த நோக்கு, கிரேக்க - ரோமானியத் தத்துவ மேதைகள், பலசமயத் துறவிகள் கொண்டிருந்த வாழ்க்கை நோக்கினின்றும் வேறுபட்டிருத்தல் குறிப்பிடற்குரியது. அன்னார் யாவரும் பிறமாந்தரின் நலன் கருதாமல் தம்மைக் காத்துக் கொள்ளலையே பெரிதாக எண்ணிப் பேசினர். திருமூலரின் இப்பாடலே இராமானுசர் தமது குருவினிடம் கற்ற உலகம் உய்யும் மந்திரத்தை அவரது ஆணைக்கு எதிராக யாவரும் அறியக் கூவிய செயலுக்குத் தூண்டுகோலாக இருந்திருக்க வேண்டும்.

மக்கள் யாவர்க்கும் முடிந்த செயல்களை மூலர் ஒரு பாடலில் தொகுத்துரைப்பார்.

யாவர்க்கு மாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம் பிறர்க்கு இன்னுரை தானே. (252)

இறைவனைப் பற்றிய பெரும் புரட்சிக் கருத்தொன்றை ஒரு பாடல் ஆரவாரமின்றி எடுத்துரைக்கும்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே. (270)

கடவுளே அன்பின் உருவம் என்று சொல்லாமல் அன்பே கடவுள் என்று மூலர் சொல்லுவது ஆழ்ந்து எண்ணற்பாலது.

ஏழு உலகங்களையும், ஏழு ஊழிகளையும், ஐந்து பூதங்களையும், உயிரையும், ஊனையும் இறைவன் படைத்தற்குக் காரணம் அவன் கொண்ட பேரன்பே.

உகந்து நின்றே படைத்தான் உலகேழும்
உகந்து நின்றே படைத்தான் பல ஊழி
உகந்து நின்றே படைத்தான் ஐந்து பூதம்
உகந்து நின்றே உயிர் ஊன் படைத்தானே.

மாந்தனுக்கு உடல் உதவியா? இடையூறா? மேலைத் தத்துவ அறிஞர்களிடமிருந்தும் வட நூலாரிடமிருந்தும் முற்றும் வேறுபடும் விடையைத் தருவார் திருமூலர். ஒருவனது அறிவுத் தேடலுக்குத் தடையாயிருப்பது உடலென்ற கருத்தினை முன் வைத்தவர் பிளேட்டோ. உடலின் துணையின்றி உண்மை அறிவைப் பெறுதல் இயலாதென்பார் திருமூலர். உயிர்வாழ வேண்டுமானால் உடலை

முறையாகப் பேணுதல் வேண்டும்; உடல் அழியுமானால் உயிரும் அழியும்; உடலே இறைவனின் ஆலயமாதலால் அதற்குச் சிறப்பிடம் தந்து போற்றுதல் தேவை.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே. (724)

உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே. (725)

மலமென்று உடம்பை மதியாத ஊமர்
தலமென்று வேறு தரித்தமை கண்டீர் (2137)

உடலை வெறுத்த சமயங்கள் யாவும் இங்குக் கடுங்கண்டனத்திற்கு ஆளாகின்றன.

(5)

அறுவகைச் சமயங்களும் ஒன்றோடொன்று பொருளற்ற போரில் ஈடுபட்டுத் தத்தம் சமயமே உயர்ந்ததென்று சமயத் தலைவர்கள் வாதிட்டு மக்களை மயக்கி அல்லறப்படுத்துவதையும் திருமூலர் கண்டிப்பார். தத்துவப் போரில் நாளும் இறங்கும் சமயத் தலைவர்களைக் குன்றிலிருந்து எழும் தனது குரைப்பின் எதிரொலி கேட்டு மீண்டும் குரைக்கும் நாயோடு ஒப்பிட்டு நகை செய்வார்.

ஒன்றது பேரூர் வழிஆறு அதற்கு
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்று உரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயை ஒத்தார்களே. (1558)

இது இந்தியத் துணைக் கண்டத்தின் ஆறு சமயங்களுக்கு மட்டுமின்றி, உலகச் சமயங்கள் யாவற்றிற்கும் பொருந்துமாறு காண்க.

கிறித்துவர்கள - யூதர்கள் - முகமதியர்கள்; கிறித்தவர்கள் - இந்துக்கள் - முகமதியர்கள் இடையே நடைபெற்றுவரும் ஓயாத போராட்டங்கள் மூடத்தனமானவை என்பதைத் திருமூலர் போல் எடுத்துச் சொன்ன சமயத்தலைவர் யாரையும் உலக வரலாற்றில் காண்கிலேம்.

எச்சமயத்தவராயினும், எங்குப்பிறந்தவராயினும் இறைவனை அடைய உண்மையோடு ஒழுகுவார்க்கு விண்ணுலகில் இடம் உறுதியென்றும் திருமூலர் கூறுவார்.

இத்தவம் அத்தவம் என்றிரு பேரிடும்
பித்தரைக் காணின் நகும்எங்கள் பேர்நந்தி
எத்தவம் ஆகிலென் எங்குப் பிறக்கிலென்
ஒத்துணர் வார்க்கொல்லை ஊர்புக லாமே.

இது அன்று வாழ்ந்த, இன்று வாழுகின்ற சமயத் தலைவர்களுக்கும் இறையியல், தத்துவமேதைகளுக்கும் திருமூலர் கூறும் அறிவுரை.

ஒவ்வொருவரும் தத்தம் வழி காட்டியைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதில் முழுக்கவனம் இன்றியமையாதது. இதில் தவறு செய்தால் குருடரால் வழிகாட்டப்பட்டு அழிவுக் குழியில் விழ நேரிடும்.

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழிவிழு மாறே. (1680)

உலகின் எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் சமயத்தலைவர் என்ற பெயரிலும் இறைவனின் அவதாரம் என்ற பெயரிலும் மக்களைத் தவறான வழியில் இழுத்துச் செல்லும் ஏமாற்றுக்காரர்களுக்கு எதிரான எச்சரிக்கை இது.

தேவர்கள் என்று கருதப்படுபவர்களே எட்டுத் திசைகளுக்கும் சென்று அவரே கடவுள், இவரே கடவுள்

என்றெல்லாம் பிதற்றித் திரியலாம்; ஆனால் உண்மையான இறைவன் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் உறைகிறான்.

அன்று நின்றான் கிடந்தான் அவன் என்று
சென்று நின்று எண்டிசை ஏத்துவர் தேவர்கள்
என்று நின்று ஏத்துவன் எம்பெருமான் தன்னை
ஒன்றியென் உள்ளத்தில் உள்ளிருந் தானே. (1762)

இறைவன் உன்னில் வாழும்போது அவனை உலகெங்கும் தேடி அலைதல் பொருளற்ற செயலாகும். உடலே ஆலயம்; வாயே கோபுரவாசல், சீவனே சிவலிங்கம்; புலன்களைந்தும் ஒளிதரும் விளக்கு.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே (1823)

கன்னடத்து வீரசைவ சமயத் தலைவரான பசவண்ணர் இக்கருத்தைத் தமது வசனத்தில் இவ்வாறே சொல்வார்.

ஊனுடம்பே ஆலயம் என்ற திருமூலர் அதனினும் அறைகூவலான ஒரு கருத்தையும் முன்வைக்கிறார். மாந்த உடலைத் தவிர வேறு இருப்பிடம் இறைவனுக்கு இல்லையென்றும் அவனைப் புறம்பென்று பேசுதல் பெறும் பிதற்றலே யென்றும் அச்சமும் தயக்கமும் இன்றி உரைப்பார்.

இவனில்லம் அல்லது அவனுக்கு அங்கில்லை
அவனுக்கும் வேறில்லம் உண்டா அறியின்
அவனுக்கு இவனில்லம் என்றென்று அறிந்தும்
அவனைப் புறம்பென்று அரற்று கின்றாரே.(2650)

(6)

உள்ளத்தே ஒளியாய்த் திகழும் இறைவனுக்கு உருவம் இல்லை. அவன் ஆணோ, பெண்ணோ, பேடோ அல்லன். அறிவுமுதிர்ந்தோரே அவன் பெருமையை அறிவர்.

பெண்ணல்ல ஆணல்ல பேடல்ல மூடத்துள்
உள்நின்ற சோதி ஒருவர்க்கு அறியொணாக்
கண்ணின்றிக் காணும் செவியின்றிக் கேட்டிடும்
அண்ணல் பெருமையை ஆய்ந்தது மூப்பே. (1872)

அன்பே இறைவனென்றும் உள்ளொளியே இறைவனென்றும் கூறிய திருமூலர் மேலும் ஒருபடி சென்று கடவுள் - மனித உறவு பற்றிய தமது புரட்சிக் கருத்தை வெளியிடுவார். சீவனும் சிவனும் இருவேறு பொருள்கள் அல்லவென்றும் சீவன் சிவனை அறியாதிருக்கும் நிலைமாறி, சீவன் சிவனை அறியும்போது சீவனும் சிவனும் ஒன்றாவர்.

சீவன் என்னச் சிவன் என்ன வேறில்லை
சீவனார் சிவனாரை அறிகிலர்
சீவார் சிவனாராய் அறிந்தபின்
சீவனார் சிவனாராய் இட்டிருப்பாரே. (2017)

இப்பாடலும் வேறு இரண்டு மூன்று பாடல்களும் ஆதிசங்கரரின் கற்பனையைத் தூண்டி, அத்வைதக் கோட்பாட்டை உருவாக்கத் துணை செய்திருக்க வேண்டும். அவரது கயிற்றரவு உருவகம் தமிழ்ப்பழமொழி ஒன்றிலிருந்து பெறப்பட்டது. (பாம்பென்று தாண்டவும் முடியவில்லை; பழுதையென்று மிதிக்கவும் முடியவில்லை)

திருமூலர் தரும் பல உவமைகளையும் சங்கரர் அறிந்திருக்க வேண்டும். "இறைவன் காற்றில் உணர்வாகவும், கரும்பில் இனிப்பாகவும் பாலில் வெண்மையாகவும், மலரில் மணமாகவும், கனியில் சாறாகவும், ஊடுருவிப் பரவியிருக்கிறான்" (2639) என்று ஒரு பாடல் கூறும். 'கயிறா, அரவமா' என்பது போன்ற வேறு உருவகங்கள் இரண்டும் திருமூலரால் தரப்பெறுகின்றன.

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னில் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தன தன்கர ணங்கள்தாம்
தன்னில் மறைந்தன தன்கர ணங்களே (2289)

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே (2290)

(பொன்னாலான அணிகளைப் பார்க்கும்போது பொன்னைப் பார்ப்பதில்லை. பொன்னைப் பார்க்கும்போது அணிகளைப் பார்ப்பதில்லை. தன்னை ஐம்பொறிகள் மறைக்கின்றன. ஐம்பொறிகளைத் தான் மறைக்கின்றது.)

(மரப்பொம்மையாலான யானையைப் பார்க்கும் போது மரம் தெரிவதில்லை. மரத்தைப் பார்க்கும் போது யானை தெரிவதில்லை. பரம் ஐம்பூதங்களில் மறைந்துள்ளது; ஐம்பூதங்கள் பரத்தில் மறைந்துள்ளன.)

திருமூலரிடமிருந்து ஆதிசங்கரர் பெற்ற வேறு இரண்டு மூன்று உருவகங்களும் உண்டு.

களிமண்ணால் செய்யப்பட்ட பொருள்கள் பலவாயினும், களிமண் ஒன்றே. இறைவனின் படைப்புகள் பலவாயினும் அவற்றுள் பரவியிருக்கும் இறைவன் ஒருவனே. கண் பல பொருள்களைப் பார்க்கக் கூடுமாயினும். தன்னைக் காண அதனால் இயலாது. இறைவன் எங்குமிருப்பினும் சீவனால் அவனைக் காண்டல் எளிதன்று.

மண்ணொன்று தான்பல நற்கலன் ஆயிடும்
உண்ணின்ற யோனிகட் கெல்லாம் ஒருவனே
கண்ணொன்று தான்பல காணும் தனைக்காணா
அண்ணலும் அவ்வண்ணம் ஆகி நின்றானே.(2351)

தண்ணீர் நிரம்பியுள்ள குடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு கதிரவன் தெரிவதைப் பார்க்கிறோம். இவ்வாறு தெரிகிற ஞாயிறு தண்ணீர்க் குடத்துள் மட்டும் இல்லை. வெளியிலும் ஒளி வீசித் திகழ்கிறது. இந்தக் குடத்துக்குள் தெரிகிற ஞாயிற்றை ஒரு தட்டைப் போட்டு மூடினால் அத்தட்டு அதனை மறைத்து விடாது. வேறுகுடத்திலும் வெளியிலும் அது தெரியத்தான் செய்யும். விடம் உண்ட நீலகண்டப்பெருமான் உடம்பில் பொருந்தி அதனுள்ளாது அடங்கியிருப்பது, குடத்துக் கதிரவனை ஒத்தது. பல உயிர்களின் உடல்களில் இறைவன் கலந்திருந்தாலும் அவற்றில் அடங்கி விடாது அவற்றைக் கடந்து நிற்கிறான்.

கடம்கடம் தோறும் கதிரவன் தோன்றில்
அடங்கிட மூடில் அவற்றில் அடங்கான்.
விடம்கொண்ட கண்டனும் மேவிய காவியத்து
அடங்கிட நின்றது அப்பரி சாமே. (200)

ஆதிசங்கரர் இதனை **உபதேச சாகஸ்ரி** என்னும் நூலில் மூன்று பாடல்களில் சொல்லக் காணலாம்.

ஆன்மா ஒன்றானாலும் தண்ணீரில் காணப்படும் கதிரவனின் பிரதிபலிப்புகளைப் போல் பலவாகத் தோன்றுகிறது. (27)

ஆன்மா ஒன்றானாலும் தண்ணீரில் காணப்படும் திங்களின் பிரதிபலிப்புகளைப் போல் பலவாகத் தோன்றுகிறது. (28)

தண்ணீரில் திங்களின் பிரதிபலிப்புகளைப்போல், ஆன்மா எங்கும் தோன்றுவதாயினும் அறிவில் பார்க்கப்படுகிறது. (34)

(7)

ஒன்றாகிய இறைவனை அடைதற்கு மாந்தன் மேற்கொள்ள வேண்டிய முயற்சி எத்தகையதாக இருக்க வேண்டுமென்பதையும் திருமூலர் குறிப்பிடுவார்.

வானின்று இடிக்கிலென் மாகடல் பொங்கிலென்
கானின்று செந்தீக் கலந்துடன் வேகிலென்
தானொன்றி மாருதம் சண்டம் அடிக்கிலென்
நானொன்றி நாதனை நாடுவன் நானே. (2850)

பல சமயத் தலைவர்கள் வாழ்வில் மகிழ்ச்சியாய் இருப்பதற்கு நாம் ஐம்புலன்களையும் அடக்க வேண்டுமென்று கூறுவர். திருமூலரோ, ஐம்புலன்களை அடக்குதல் தேவர்களாலும் ஆகாதென்றும், ஐம்புலன்களை அடக்கினால் ஒருவன் உயிரற்ற சடப்பொருளாக வேண்டுமென்றும், ஐம்புலன்களை அடக்காமலேயே வாழ்க்கையை நலமுற நடத்த இயலுமென்றும் கூறுவார்.

அஞ்சும் அடக்கு அடக்கென்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கிலை
அஞ்சும் அடக்கில் அசேதனமாம் என்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவறிந்தேனே. (203)

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாமென்பதை மறந்து உணவையும் உடையையும் மட்டுமே கருத்தாகக் கொண்டு வாழ்வில் பலர் துன்புறுகிறார்களேயென்று திருமூலர் வருந்துவார்.

இன்பத்துளே பிறந்து இன்பத்துளே வளர்ந்து
இன்பத்துளே திளைக்கின்ற இது மறந்து
துன்பத்துளே சிலர் சோறொடு கூறையென்று
துன்பத்துளே நின்று தூங்குகின்றார்களே. (2089)

மனிதப்பிறவியைத் தீயதென்று எண்ணி வருந்துதல் வேண்டாமென்றும் அது பெறற்கரிய பேறென்றும் அதனை இறைவனை வாழ்த்தி வணங்குதற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் பிற பிராணிகளெல்லாம் இப்பேறு கிடைக்கப் பெறாதவை என்றும் மூலர் வலியுறுத்தும் போதும் பல சமயத்தலைவர்களிடமிருந்து வேறுபடுகிறார். பிறவியை நோயாகக்

கண்டவரும் சாபக் கேடாகக் கருதியவருமே மிகுதியெனச் சொல்லத் தேவையில்லை.

பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற்கரிய பிரானடி பேணார்
பெறுதற்கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற்கரியதோர் பேறிழந்தாரே. (2090)

பழந்தமிழினம் மனிதப்பிறவியைக் கேடாகக் கருதவில்லையென்பதை ஔவையாரின் 'அரிதரிது மானிடராதல் அரிது' என்ற கூற்றாலும் அறியலாம்.

(8)

திருமூலர் கூற்றுகளில் சொல்லாலும் பொருளாலும் பெருஞ்சிறப்புடையது, 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்பதே.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி இல்லை நும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர் நினைந்து உய்மினே. (2104)

திருமூலருக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த சங்கச் சான்றோர் ஒருவர் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று முழங்கியதை இன்று உலகு அறியும். தமிழ் அறிஞர் சிலர் ஒருலகக்கோட்பாடு இருபதாம் நூற்றாண்டில் தோன்றியதென்றும் இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னால் இதனைத் தமிழர் வலியுறுத்தியிருத்தற்கு வாய்ப்பில்லையென்றும் கூறுவர். ஆனால் சங்க இலக்கியங்கள் பலவும் பிற்சங்க இலக்கியங்கள் சிலவும் கம்பராமாயணம், பெரியபுராணம் போன்ற காப்பியங்களும் 'உலகு' என்ற சொல்லோடு தொடங்கும் தமிழ் இலக்கிய மரபை அன்னார் அறியவில்லை போலும்! 'உலகம்' தமிழ்ச் சொல் என்பதும் உலகைக் குறிக்க 'வையம்', ஞாலம், 'மாநிலம்', 'இருநிலம்' போன்ற சொற்களெல்லாம் உள்ளன என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். முதுமொழிக் காஞ்சி என்னும் அறநூல், தான் சொல்லும்

அறக்கருத்துகள் யாவும், 'ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்' பொதுவென்பதை ஒவ்வொரு பாடலிலும் சுட்டிக் செல்லக் காணலாம்.

மாந்த இனம் ஒன்றென்பதையும் சாதி,சமய,வருண அடிப்படைகளில் பிரிவுகள் பேசுவது அறிவீனம் என்பதையும் திருமூலர் ஓர் அரிய உருவகத்தால் விளக்குவார்.

பசுக்கள் பலவண்ணம் பாலொரு வண்ணம்
பசுக்கள் மேய்க்கின்ற ஆயன் ஒரு வண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன்கோல் போடில்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே. (2193)

பசுக்கள் பல வண்ணத்தவையாகலாம்; பசுக்களிடமிருந்து பெறும் பால் வெள்ளைநிறத்ததே; பசுக்களை மேய்க்கும் ஆயன் ஒரு வண்ணத்தனே; அவன் கோலைக் காட்டினால் பசுக்கள் யாவும் அவனைப்பற்றிக் கொண்டு அவனிடமிருந்து விலகா. இறைவனை எவ்வாறு தேடி அடைவது? நிலைத்த ஆர்வம் கொண்டு, ஐயத்திற்கும் தயக்கத்திற்கும் இடம் கொடாமல், எதிர்கொள்ளும் இடையூறுகளால் தளர்ந்து விடாமல் பயணத்தை மேற்கொண்டால் யாவரும் அவனோடு இணையலாம்.

வானின்று இடிக்கிலென் மாகடல் பொங்கிலென்
மானின்ற செந்தீக் கலந்துடன் வேகிலென்
தானொன்றி மாருதம் சண்டம் அடிக்கிலென்
நானொன்றி நாதனை நாடுவேன் நானே. (2850)

(9)

இறைவனோடு இணையும் இன்பம் எத்தகையது? மூடர்களே அவனைப் புறக்கண்களால் காணமுயல்வர்; அகக்கண்களாலேயே அவனைக் காணமுயலுதல் இயலாது; தாய்,

தன் கணவனோடு கூடிப்பெற்ற இன்பத்தை மகளுக்கு விளக்கமுடியுமா?

முகத்தில் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோடு ஆடிய
சுகத்தைச் சொல்லென்றால்
சொல்லுமாறு எங்ஙனே. (2944)

விரிந்து பரந்த மேகங்கள் விண்ணினை நெருங்கல் இயலாது; பல பெருங்காட்சிகள் கண்ணுக்குள் அடங்கா; எண்ணத்தால் அவனைப்புரிந்து கொள்ளமுடியாது; பசுவும் பாசமும் அவனை அவ்வாறே அடைதல் இல்லை.

விண்ணைச் சென்றணுகா வியன் மேகங்கள்
கண்ணினைச் சென்றணுகா பல காட்சிகள்
எண்ணினைச் சென்றணுகா மலெனப்படும்
அண்ணலைச் சென்றணுகா பசு பாசமே. (1436)

மயங்கிய அறிவால் செலுத்தப்பெறும் உடல்தேர் இறைவனை அடையத் துணை செய்யாது. அன்பினாலேயே அவன் அருளைப் பெற வேண்டும்.

காயத்தேர் ஏறி மனப்பாகன் கைகூட்ட
மாயத்தேர் ஏறி மயங்கு மவையுணர்
நேயத்தேர் ஏறி நிமலன் அருள் பெற்றால்
ஆயத்தேர் ஏறி அவன் இவனாமே. (1651)

இறைவனின் அடியார்கள் இறைவனையொத்த வணக்கத்திற்கும் பணிவிற்கும் அன்பிற்கும் உரியவர்கள். ஆலயத்தில் இறைவனுக்கென அளிக்கப்படும் பூசனைப் பொருள்கள் அடியார்களை அடையா. ஆனால் அடியார்களுக்கு அளிக்கப்படும் ஒன்று இறைவனை அடையும்; ஏனெனில் அடியார்களே நடமாடும் ஆலயங்கள்.

படமாடக் கோயில் பகவற்கு ஒன்றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க் கங்காகா
நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக் கோயில் பகவற் கதாமே. (1857)

ஆயிரம் இல்லங்களை அந்தணர்களுக்குக் கட்டிக் கொடுப்பதினும், நூறாயிரம் அந்தணர்களுக்கு உணவளிப்பதினும், தெய்வங்களுக்கு ஆயிரம் கோயில்கள் அமைப்பதினும் ஓர் அடியார்க்கு ஒரு பகல் உணவளித்தல் மேலாகும்.

அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகரம் ஆயிரம் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரிலை என்பது நிச்சயந் தானே. (1860)

(10)

திருமூலரின், சிறப்பெனச் செதுக்கப்பட்ட பாடல்கள் செய்யுள், பேச்சு ஆகிய இரண்டு வழக்கிலுமுள்ள சொற்களையும் புலப்படாதனவற்றைப் புலப்படுத்திக் கேட்டார்க்கு இன்பம் பயக்கும் உருவகங்களையும், உவமைகளையும், குறியீடுகளையும் கையாண்டு மீவுயர் தத்துவ இறையியல் கருத்துகளை அள்ளித்தரக் காணலாம்.

தொல்காப்பியரும் திருவள்ளுவரும் மந்திரத்தை 'சான்றோர் ஆணையிற் கிளந்த மறைமொழி' என்பர். திருக்குறள் கற்ற வங்க அறிஞராகிய அரவிந்தர்,

Its message enters Stirring the blind brain
And Keeps in the dim ignorant cells its sound ;
The hearer understands a form of words
And, musing on the index thought it holds,
He strives to read it with the laboring mind

But finds bright hints, not the embodied truth;
Then falling silent in himself to know
He meets the deeper listening of his soul;
The word repeated itself in rhythmic strains;
Thought, vision, feeling, sense, the body's self
Are seized unalterably and he endures
Ancistasy and an immortal change. (Savitri)

என்று மந்திரத்தை விளக்குவார்.

மந்திரமானது சந்த இன்பம் தரும் கவிதையாகப் பேருண்மையின் இருப்பிடத்திலிருந்தும் சான்றோனின் உள்ளத்திலிருந்தும் ஒரே சமயத்தில் பிறக்கிறது என்பார் அரவிந்தர். உயர்ந்த கவிதையைச் சொல்லும் சந்தம் மட்டும் கூடிப்படைத்து விட முடியாது. மந்திரத்தைப் படைப்போனுக்குத் தெளிந்த காட்சியும் உள்ளார்ந்த அனுபவ முதிர்ச்சியும் தேவை. அவ்வாறு தோற்றம் பெற்ற மந்திரமொழி, கேட்போனை எவ்வாறு தாக்குகிறது என்பதையும் அரவிந்தர் புலப்படுத்துவார். கேட்போனின் தூங்கும் அறிவை அதன் செய்தியானது தூண்டி எழுப்புகிறது; அதன் ஓசை மூளையின் திசுக்களில் படிகின்றது; கேட்போன் சில சொற்களைப் புரிந்து கொள்கிறான்; அறிவுக்கு வேலை கொடுத்து, மந்திரம் கூறும் முழு உண்மையைப் புரிந்து கொள்ளும் அவனது முயற்சி வெற்றி பெறுவதில்லை; எனவே, அமைதியடைந்து, அவனது ஆன்மாவின் ஆழ்ந்த கேள்விக்குத் தன்னை உட்படுத்துகிறான்; அதனால் மந்திரத்தின் சொல்லும், சந்தமும், எண்ணமும், காட்சியும், உணர்வும் அவனுக்கு முற்றுமாகப் பிடிபடுகின்றன; பேருவகை பெற்று, நிலைத்த மாற்றத்தையும் அவன் பெறுகிறான்.

இவ்விளக்கமானது திருமூலரின் தமிழ்மந்திரப் பாடல்களுக்கு முற்றும் பொருந்தக் காணலாம்.

செம்மொழித் தமிழில் சீரிய ஆய்வுகள் (நான்கு தொகுதி)

பேராசிரியர் அ.பிச்சை,
30, பி.கே.எம். நகர்,
கருப்பாயூரணி - 625 020.
மதுரை மாவட்டம்

- **பேராசிரியர் இரா.சதாசிவம்**

"செம்மொழித் தமிழில் சீரிய ஆய்வுகள்" என்னும் தலைப்பில் பேராசிரியர் அ.பிச்சை அவர்கள் நான்கு தொகுதிகள் வெளியிட்டுள்ளார். பேராசிரியர் திறனாய்வு நெறி நின்று வரலாற்று நோக்கில் தமிழ் மொழியில் இதுவரை வந்துள்ள ஆய்வு நூல்களை முறைப்பட எண்ணித் தம்முடைய கருத்துக்களைத் தொகுத்து வழங்கி இருப்பது மிக்க அருமைப்பாடுடையதாகும்.

முந்து நூல்கண்டு முறைப்பட எண்ணி தொல்காப்பியம் தொகுத்த காலம் தொடங்கி இன்றுவரைத் தமிழ் நூல் வகைப்பாடுகளையும் ஆய்வாளர்கள் சிந்தனைக் கருத்துக்களையும் தம் கருத்துக்களையும் ஆசிரியர் வாசகருடன் பகிர்ந்து கொள்ளும் நுட்பம் ஒரு அரியமுயற்சியாகும்.

சங்ககாலம் முதல் இலக்கியத்தின் உள்ளீடு, அதன்கட்டமைப்பு, சமயத்தாக்கம், சமுதாயப் பொருளாதார சிதைவுகள், நூல்கள் தோன்றிய காலம் அரசியல் பின்னணி, மதங்களின் பின்புலம் எனப் பல்வேறு செய்திகளைத் திறனாய்வுக்கு உட்படுத்தி நூலை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்க செய்தி.

இந்திய எண்முறை குறித்த அறிவியல் கோட்பாட்டைப் பத்து குறிகளை மட்டும் வைத்துக் கொண்டு சுட்டக் கூடிய அற்புதத்திட்டத்தை உலகிற்கு அறிமுகம் செய்த செய்தி தொடங்கி தமிழில் உறவுப் பெயர்கள் தெளிவாக அமைந்திருப்பதை எடுத்துரைப்பது தமிழ் செம்மொழி என்பதை எடுத்துக்காட்டும் என அறிவியல் நோக்கிலும் மக்கள் புரிந்து கொள்ளும் எளிமையோடு விளக்கிச் செல்வது நூலாசிரியரின் எழுத்தாற்றலுக்குச் சிறந்த எடுத்துக் காட்டு.

நாட்டின் வளமைக்கும் செழுமைக்கும் பொருள் ஈட்டத்திற்கும் உடலோம்பும் வாழ்வியல் கோட்பாடாக மருந்து, உழவு முதலான கோட்பாடுகளை ஆசிரியர் எடுத்துரைப்பதோடு பழைய நாட்களில் ஆறில் ஒரு பங்கு வரி என்பது பதினேழு விழுக்காடு; ஆனால் இன்று முப்பத்தெட்டு விழுக்காடு சி எசுடி வரி வசூல் நடப்பது உச்சக்கட்டவரி என்பதையும் ஆசிரியர் சுட்டியிருப்பது பொருளாதார வீழ்ச்சியை உணர்த்துகிறது. மன்னர்களின் தெய்வ நம்பிக்கையைப் பயன்படுத்தி தானம் என்ற பெயரில் அந்தணர்கள் ஆயிரக்கணக்கான ஊர்களைத் தானம் பெற்று புரோகிதர்கள் நிலக்கிழார்களாக மாற்றம் பெற்று மேல் தட்டுக் குழுக்கள் வாழ்வு செழித்தும் கீழ்தட்டு மக்கள் சுரண்டப் படுவதையும் ஆசிரியர் எடுத்துரைப்பது எண்ணற்பாலது.

பேராசிரியர் அ.பிச்சை நூலுள் "**தொல்காப்பியம் குறிப்பிடும் ஆறாம் அறிவாகிய "மனம்" என்ற கோட்பாடு திருவள்ளுவருக்கு உடன்பாடில்லை**" என்ற ஐயவினாவை எழுப்பி "**உளவியல் நோக்கில் திருக்குறள்**" என்னும் கட்டுரையை அமைத்திருக்கிறார்.

> "**நிலம் நீர் தீ வளி விசும் போடு ஐந்துங்**
> **கலந்த மயக்கம் உலகம்**" என்றும்

"மெய்ப்பட நாடிச்
சொல்லிய அல்ல பிற அவண்வரினும்
சொல்லிய வகையாற் சுருங்க நாடி
மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்து கொண்டு
இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்"

என்னும் தொல்காப்பியத் தொடர்களும் இன்னபிறவும் திருக்குறள்

"ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லாதவர்க்கு.
காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடக் கெடும் நோய்" போன்ற

திருக்குறளோடு ஒத்திசைவுடையதாக அமைந்துள்ளது. மனம் என்பது பொறிஅல்ல; பொறி புலன்களை உணர்ந்து ஏற்றுக்கொள்கின்ற பதிவுகளின் கொள்கலனாக அமைந்து மூளையையும் மனப் போக்கையும் இயக்குவதாகத் திருக்குறள் கருத்துக்கள் அமைந்துள்ளன, **"மனத்துக்கண் மாசிலன் ஆதல்"** அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் போன்ற தொடர்கள் மனத்தின் உள்ளீட்டையும் அதன் வெறுமையையும் காட்டுகிறது. வெறுமையாக இருக்கும் கொள்கலனாகிய மனத்தில் படைப்பாற்றலுக்குரிய அன்பு (காதல்), அழகு (முருகியல்) நிரம்பும் என்று கொள்ள வேண்டும். அருள் கருதி அன்புடையர் ஆதல் போன்ற தொடர்கள் சிந்தனைக்குரியன மனம் எதனால் நிரம்புகிறது என்பது சூழலைப் பொறுத்தது. மனமும் மூளையும் சூழலின் தாக்கமேயாகும். ஐந்துங் கலந்த மயக்கம் உலகம் என்னும் தொல்காப்பியமும், **"ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே மெய்யுணர்வு இல்லாதவர்க்கு"** என்னும் திருக்குறளும் இருபெரும் சான்றோரும் ஒத்திசைவுடைய சிந்தனையாளர்கள் என்பதைக் காட்டும். பேராசிரியர் அ.பிச்சையின் ஆய்வு வரலாற்று

நூல் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூல் இது போன்ற பல செய்திகளையும் சிந்தனையையும் உள்ளடக்கிய ஆய்வுப் பெட்டகமாக அமைந்துள்ளது. வாசகர்களை சிந்திக்க வைக்கும் நோக்கில் நூல் நிறைந்துள்ளது. வாசகர்களை சிந்திக்க வைக்கும் நோக்கில் பல கேள்விகளையும் ஐயங்களையும் கேட்டு விடை காணமுயற்சிக்கும் ஆசிரியரின் நூலாக்கம் ஆய்வு மாணவர்களுக்கு ஒரு திறவுகோலாக அமைந்துள்ளது. சங்க இலக்கியத்தைத் தொடர்ந்து சமய இலக்கியம், பிற்கால இலக்கியம் விடுதலைக் காலத்தில் தோன்றிய இலக்கியப்பின்னணி இன்றைய கால கட்டத்தில் தோன்றிய கதை, கவிதை முதலாக அனைத்து இலக்கிய வகைகளையும் நூல் ஆய்ந்த ஆய்வாளர்கள் செய்திகளையும் வகுத்துத் தொகுத்து நான்கு தொகுதிகளாக வெளிட்டுள்ளார்; இம்முயற்சி ஒரு இலக்கிய இலக்கண ஆய்வு வரலாறாக அமைந்துள்ளது.

பேராசிரியர் அ.பிச்சை காந்திகிராமம் நடுவண் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். அப்பெரியார் ஒரு வாழ்நாள் ஆய்வாளர்; வாழ்நாள் முழுவதும் கற்றல், கேட்டல், மாணவர்களுக்குப் பாடம் சொல்லுதலோடு காலந்தோறும் இலக்கியத்தை வகைமைப்படுத்தி இலக்கிய இலக்கணப் பயிற்சியோடு நவீன இலக்கியத்தையும் முறையாக தெரிந்து தேர்ந்து கற்று அவற்றைத் திறனாய்வு செய்திருப்பது போற்றுதற்குரிய செய்தி. தமிழ் உலகத்தில் தடம்பதித்த அனைத்து இலக்கியச் செல்வர்கள், நூலாசிரியர்கள், ஆராய்ச்சித் துறைப்பேராசிரியர்கள் புதுக்கவிதை ஆசிரியர்கள் என யாரையும் புறக்கணிக்காமல் அனைவரையும் கற்று அந்நூல்களின் திறப்பாட்டை வெளியிட்டிருப்பது இந்நூலாசிரியர் ஒரு மூதறிவாளர் என்பதற்குத் தக்க சான்றாகும். நான்கு தொகுதிகளையும் கல்லூரிப் பேராசிரியர்கள் மாணவர்கள் ஒருமுறை படிப்பது அவர்களுடைய ஆய்வுக்குப் பெருந்துணையாக இருக்கும்.

சங்கச் செய்திகள்

03.02.2020 அன்று நான்காம் தமிழ்ச் சங்கம் செந்தமிழ்க் கல்லூரியும் பாலக்காடு தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையமும் இணைந்து 'கவிஞர் வானவில் கே.ரவியின் பார்வையில் பாரதியின் பன்முக ஆளுமை' என்ற பொருண்மையில் நடத்தியக் கருத்தரங்கம், கல்லூரி வைரவிழா அரங்கில் நடைபெற்றது. இக்கருத்தரங்கத்திற்குக் கல்லூரிச் செயலர் இராணி ந.லட்சுமி குமரன்சேதுபதி தலைமை வகித்தார். பாலக்காடு தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையத்தின் பேராசிரியர் முனைவர் கு.அ.இராஜாராம் முதன்மையுரையாற்றினார். சென்னை ஜஸ்டீஸ் பசீர் அகமது மகளிர் கல்லூரிப் பேராசிரியர் முனைவர் பர்வீன் சுல்தானா சிறப்புரை ஆற்றினார். வழக்குரைஞர் கவிஞர் வானவில் கே.ரவி ஏற்புரை வழங்கினார். முதலாம் அமர்வில் தூத்துக்குடி ஏ.பி.சி.மகாலெட்சுமி மகளிர் கல்லூரித் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் க.சுப்புலெட்சுமி, செந்தமிழ்க் கல்லூரி மேனாள் மாணவர் முனைவர் கு.ஆறுமுகப் பெருமாள், மதுரை தியாகராசர் கல்லூரி உதவிப்பேராசிரியர் முனைவர் ஞா.செல்வராக்கு, கம்பம் ஆதிசுஞ்சனகிரி மகளிர் கல்லூரி உதவிப் பேராசிரியர் முனைவர் இரா.தமிழ்ச் செல்வி ஆகியோரும், இரண்டாம் அமர்வில் மதுரை பாத்திமா கல்லூரி தமிழ்த்துறை மேனாள் தலைவர் முனைவர் சி.எஸ்.விசாலாட்சி, அருப்புக்கோட்டை, மதுரை காமராசர் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி உதவிப் பேராசிரியர் முனைவர் செ.இராஜ்மோகன், செந்தமிழ்க் கல்லூரி உதவிப் பேராசிரியர் முனைவர் பா.நேருஜி, எழுத்தாளர் முனைவர் ஜெயந்தி நாகராசன் ஆகியோரும் கட்டுரைகள் வழங்கினர். கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கி.வேணுகா வரவேற்புரையும் உதவிப் பேராசிரியர் முனைவர் மா.செல்வத்தரசி நன்றியுரையும் நல்கினர். துணை முதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி மற்றும் உதவிப் பேராசிரியர் முனைவர் பூ.பூங்கோதை ஆகியோர் இக்கருத்தரங்கினை ஒருங்கிணைத்தனர்.

07.02.2020 அன்று ஆசிரிய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கருத்தரங்கு நடைபெற்றது. பாரதியார் மற்றும் நூருல் இஸ்லாம் பல்கலைக்கழகங்களின் மேனாள் துணைவேந்தர் முனைவர் எஸ்.சிவசுப்பிரமணியன் 'தேசியத் தர மதிப்பீட்டின் புதிய வடிவம் - ஒரு முன்னுதாரண மாற்றம்' என்ற பொருண்மையில் விளைவு அடிப்படையிலான கல்வி, மாணவர் மையக் கல்வி, ஆசிரியர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவின் அவசியம், பலவகைக் கற்றல் - கற்பித்தல் முறைகள் குறித்துச் சிறப்புரை ஆற்றினார். தேசியத் தர மதிப்பீட்டுக்குழுவின் வழிகாட்டுதலின்படி அமைக்கப்பட்ட செந்தமிழ்க் கல்லூரி அகநிலை உயர்தர உறுதிப்படுத்தும் குழு இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கி.வேணுகா வரவேற்புரையும் அகநிலை உயர்தர உறுதிப்படுத்தும் குழுவின் ஒருங்கிணைப்பாளர் தி.பிருந்தா நன்றியுரையும் நல்கினர்.

08.02.2020 அன்று முற்பகல் 10.30 மணியளவில் உலகப் புற்றுநோய் தினத்தினை முன்னிட்டு நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பாகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது. மதுரை அரசு இராசாசி மருத்துவமனை மேனாள் முதன்மையர் மற்றும் மகப்பேறு மருத்துவ வல்லுநர் இரேவதி கயிலைராசன் கருத்துரை வழங்கினார். சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி தலைமையும், கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கி.வேணுகா முன்னிலையும் வகித்தனர். உதவிப் பேராசிரியர் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்களான முனைவர் பூ.பூங்கோதை வரவேற்புரையும், முனைவர் பா.நேருஜி நன்றியுரையும் நல்கினர். உதவிப் பேராசிரியர் முனைவர் மா.செல்வத்தரசி இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

08.02.2020 அன்று திண்டுக்கல், பார்வதீஸ் கலை அறிவியல் கல்லூரி - சாரல் தமிழ் இலக்கிய மன்றத்தின் சார்பில் முத்தமிழ் விழாவில் நடத்தப்பட்ட போட்டிகளில் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் த.கார்த்திகா கவிதைப் போட்டியில் முதலிடமும், மா.முனிச்செல்வம், கி.மகாலிங்கம், பா.சுசித்ரா, ச.பாலசரவணன்,

மு.விஜய், லெ.கலையரசன் ஆகியோர் அடங்கிய குழு நிலைக்காட்சிப் போட்டியில் முதலிடமும், கா.பிரியரஞ்சனி நானாக நானில்லை போட்டியில் இரண்டாம் இடமும், த.கார்த்திகா, க.ரேவதி மற்றும் கா.பிரியரஞ்சனி ஆகியோர் தமிழோடு விளையாடு போட்டியில் மூன்றாமிடமும் வகித்தனர்.

10.02.2020 அன்று நான்காம் தமிழ்ச் சங்கம் செந்தமிழ்க் கல்லூரியும் சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழும் இணைந்து நடத்திய ஒருநாள் தேசியப் பயிலரங்கம் கல்லூரி வைரவிழா அரங்கில் நடைபெற்றது. உதவிப் பேராசிரியர் முனைவர் அ.நந்தினி வரவேற்புரை நல்கினார். கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கி.வேணுகா முன்னிலை வகித்தார். சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழின் முதன்மை ஆசிரியர் முனைவர் ந.முருகேசபாண்டியன் பயிலரங்கத்தின் நோக்கத்தினை எடுத்துரைத்தார். பதிப்பாசிரியர் சு.லெட்சுமணன் வாழ்த்துரை வழங்கினார். முதல் அமர்வில் காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகப் பேராசிரியரும் புலத்தலைவருமான முனைவர் பா.ஆனந்தகுமார் ‘ஆய்வின் தேவை -ஆய்வுக் களங்கள் - ஆய்வுச் சிக்கல்கள்’ என்ற தலைப்பிலும், சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழின் முதன்மை ஆசிரியர் முனைவர் ந.முருகேசபாண்டியன் ‘ஆய்வில் கோட்பாடுகளின் பயன்பாடுகள்’ என்ற தலைப்பிலும் உரையாற்றினர். இரண்டாம் அமர்வில் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை மேனாள் தலைவர் முனைவர் பா.மதிவாணன் ‘ஆய்வுக் கட்டுரையின் எழுத்து நுட்பங்களும் முறையியலும்’ என்ற தலைப்பில் உரையாற்றினார். மூன்றாம் அமர்வில் பங்கேற்பாளர்கள் குழுக்களாகப் பிரிந்து பேராசிரியர்களுடன் ஆய்வு குறித்து கலந்துரையாடினர். இப்பயிலரங்கில் இருபத்தொன்பது கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த எழுபத்தைந்து ஆய்வாளர்கள் பங்கேற்பாளர்களாகக் கலந்து கொண்டனர். பங்கேற்பாளர்களுக்குச் சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி சான்றிதழ் வழங்கினார். சான்லாக்ஸ் பதிப்பகத்தைச் சேர்ந்த ப.கார்த்திக் நன்றியுரை

நல்கினார். உதவிப் பேராசிரியர் முனைவர் அ.நந்தினி மற்றும் நூலகர் தி.பிருந்தா ஆகியோர் இப்பயிலரங்கினை ஒருங்கிணைத்தனர்.

12.02.2020 அன்று பிற்பகல் 2.00 மணியளவில் செந்தமிழ்க் கல்லூரி, வளரி கவிதை இதழ், மலேசியா உலகத் தமிழ்க் கவிஞர்கள் பேரமைப்பு இணைந்து நடத்திய ‘தைத்திருநாள் கவியரங்கம்’ கல்லூரி வைரவிழா அரங்கில் நடைபெற்றது. சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கி.வேணுகா முன்னிலை வகித்தார். ‘வளரி’ கவிதை இதழின் துணை ஆசிரியர் செல்வி அ.சுகன்யா வரவேற்புக் கவிதை வாசித்தார். மணியம்மை மழலையர் பள்ளித் தாளாளர் பி.வரதராசன் தொடக்க உரையாற்றினார். உலகத் தமிழ்க் கவிஞர்கள் பேரமைப்பின் முதன்மைச் செயலரும் ‘வளரி’ இதழின் ஆசிரியருமான அருணாசுந்தரராசன் தொடக்கக் கவிதை வாசித்தார். மதுரை மாவட்ட தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் தலைவர் கவிஞர் மு.செல்லா கவியரங்கிற்குத் தலைமை வகித்தார். உதவிப் பேராசிரியர்கள் முனைவர் ஜெ.போ.சாந்திதேவி, முனைவர் மு.செந்தில்குமார், முனைவர் பி.ஆறுமுகம், முனைவர் அ.நந்தினி, முனைவர் பா.நேருஜி மற்றும் மாணவர்கள் த.கார்த்திகா, சு.முத்துப்பாண்டி, கா.பிரியரஞ்சனி, பெ.தெய்வம், க.ஜெகதீஸ்வரன் ஆகியோர் ‘தைத்திருநாள்’ என்ற பொருண்மையில் கவிதை வாசித்தளித்தனர். துணை முதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி நன்றியுரையாற்றினார்.

13.02.2020 அன்று முற்பகல் 11 மணியளவில் சதாவதானி செய்கு தம்பிப் பாவலர் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இரண்டாம் ஆண்டு இளம் இலக்கியம் மாணவர் சு.மோகன் கார்த்திக் தமது உரையில் “செய்கு தம்பிப் பாவலர் தமிழகத்தின் முதல் ‘சதாவதானி’ என்ற பெருமைக்குரியவர், விடுதலைப் போராட்ட வீரர், ‘இஸ்லாமிய மித்திரன்’ இதழாசிரியர்,

'கோட்டாறு பிள்ளைத்தமிழ்', 'அழகப்பக் கோவை', 'பதிற்றுப்பத்து அந்தாதி' ஆகிய நூல்களின் ஆசிரியர் 'சீறாப்புராணம்' உரையாசிரியர்; சிலேடைக் கவிஞர்; அரபு, மலையாளம், தமிழ் எனப் பன்மொழிப் புலமையாளர், வள்ளலாரை ஆதரித்த இஸ்லாமியர்" என்று குறிப்பிட்டார். முன்னதாக செய்குத் தம்பிப் பாவலர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர்(பொ.), துணை முதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

17.02.2020 அன்று முற்பகல் 10.30 மணியளவில் பேராசிரியர் ச.வையாபுரிப்பிள்ளை நினைவேந்தல், சங்க வளாகத்தில் நடைபெற்றது. முதலாம் ஆண்டு இளம் இலக்கியம் பயிலும் மாணவி மு.பிரியங்காபாப்பு தமது உரையில், 'தமிழ் மொழிப் புலமையாளர், ஆய்வாளர், ஆய்வுக்கட்டுரையாளர், திறனாய்வாளர், மொழிபெயர்ப்பாளர், சொற்பொழிவாளர், வழக்குரைஞர், கதையாசிரியர், கவிஞர் போன்ற பன்முகப் பெருமைகளுக்கு உரியவர். உலகப் புகழ்பெற்ற ஆக்ஸ்போர்டு பேரகராதிக்கு இணையாகத் தெற்காசிய மொழிகளுள் மிகச் சிறந்ததாகப் பேசப்படும் அகராதியான சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட தமிழ்ப் பேரகராதியின் ஆய்வுக் குழுத்தலைவராகவும் பொறுப்பாளராகவும் பணியாற்றியவர். கம்பனின் கவிநயத்தில் சொக்கிப்போன வையாபுரியார் டி.கே.சி உடன் இணைந்து திருநெல்வேலியில் கம்பன் கழகத்தை உருவாக்கியவர். நூலாசிரியர், பதிப்பாசிரியர் என்ற இரு நிலைகளில் இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. தமிழ் ஆய்வாளன் செயல்படச் செயல்படவே தமிழின் நீர்மையும் சீர்மையும் நம்மாலும் உணரப்பட்டு உலகிற்கும் உணர்த்தப்படும் என்பதற்குப் பேராசிரியரின் தமிழ்ப்பணி ஒரு சிறந்த எடுத்துக்காட்டு' என்று குறிப்பிட்டார்.

20.2.2020 அன்று மதுரை, நான்காம் தமிழ்ச் சங்கம், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மற்றும் நியூ செஞ்சுரி

புக் ஹவுஸ் இணைந்து 'பேராசிரியர் தி.சு.நடராசனின் திறனாய்வுத் தடம்' என்ற பொருண்மையில் நடத்திய கருத்தரங்கம் கல்லூரி வைரவிழா அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் தோழர் இரா.நல்லகண்ணு தலைமை தாங்கினார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மதுரை மாவட்டத் தலைவர் கவிஞர் மு.செல்லா வரவேற்புரை நல்கினார். சாகித்ய அகாதெமியின் தமிழ் ஆலோசனைக் குழு ஒருங்கிணைப்பாளர் கவிஞர் சிற்பி கருத்தரங்கத் தொடக்கவுரையாற்றினார். இலக்கிய விமர்சகர் முனைவர் ந.முருகேசபாண்டியன், பத்திரிகையாளர் மற்றும் செந்தமிழ்க் கல்லூரி மேனாள் மாணவர் மணா, கவிஞர் செல்மா பிரியதர்சன், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை மேனாள் தலைவர் முனைவர் அ.இராமசாமி, உதவிப் பேராசிரியர் முனைவர் அ.நந்தினி, காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகப் புலத் தலைவர் முனைவர் பா.ஆனந்தகுமார், குமரகுருபரர் கலை அறிவியல் கல்லூரி உதவிப் பேராசிரியர் முனைவர் சு.வேணுகோபால், கவிஞர் ஸ்ரீரசா, சிறுகதையாசிரியர் சந்திரகாந்தன், மதுரைக் கல்லூரி இணைப் பேராசிரியர் முனைவர் ந.இரத்தினக்குமார் ஆகியோர் கட்டுரைகள் வாசித்தளித்தனர். இக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டு 'தி.சு.ந. திறனாய்வுத்தடம்' என்ற தலைப்பில் கருத்தரங்க நூலும், தி.சு.ந.எண்பது அகவை நிறைவு விழா மலரும் வெளியிடப்பட்டன. பேராசிரியர்கள் அ.சீனிவாசன், ஆ.திருநாகலிங்கம், உ.அனார்கலி, ந.ம.வீ.இரவி, கு.மகுடீஸ்வரன், மேனாள் நூலகர் மு.பழனிச்சாமி உள்ளிட்டோர் பேராசிரியர் தி.சு.நடராசன் உடனான நினைவலைகளைப் பகிர்ந்து கொண்டனர். பேராசிரியர் தி.சு.நடராசன் ஏற்புரை வழங்கினார். பேராசிரியர் தி.சு.ந.வின் மாணவர்கள் இக்கருத்தரங்கினை ஒருங்கிணைத்தனர்.

21.02.2020 அன்று முற்பகல் 10.00 மணியளவில் உலகத்தாய்மொழி நாள் கல்லூரி, வைரவிழா அரங்கில் கொண்டாடப்பட்டது. சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் கி.வேணுகா வரவேற்புரை நல்கினார். திருமதி கவிதா ஜவகர் 'தமிழுடன் பிறந்தோம்' என்ற தலைப்பில் தமிழ்மொழியின் பெருமைகள், காலந்தோறும் எதிர்கொண்ட சிக்கல்களைத் தமிழ் வென்ற திறம், தமிழிலக்கிய வாசிப்பின் அவசியம் குறித்துச் சிறப்புரையாற்றினார். முற்பகல் 11.30 மணியளவில் 'மொழிப்பற்று மிகுதியும் வெளிப்படும் படைப்புகளைத் தந்தவர் பாரதியாரா? பாரதிதாசனா?' என்ற தலைப்பில் மேனாள் முதல்வர் முனைவர் க.சின்னப்பா தலைமையில் பட்டிமன்றம் நடைபெற்றது. 'பாரதியாரே' என்ற அணியில் மேனாள் மாணவர் சங்கச் செயலர் புலவர், முனைவர் வை.சங்கரலிங்கம், முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவி த.கார்த்திகா, துணை முதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி ஆகியோரும் 'பாரதிதாசனே' என்ற அணியில் மேனாள் மாணவர் சங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் கு.ஆறுமுகப்பெருமாள், இளங்கலை இரண்டாம் ஆண்டு மாணவி கா.பிரியரஞ்சனி, அருப்புக்கோட்டை, மதுரை காமராசர் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி உதவிப் பேராசிரியர் முனைவர் செ.இராஜமோகன் ஆகியோரும் பங்கேற்றுப் பேசினர்.

24.02.2020 அன்று பிற்பகல் 2.00 மணியளவில் பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பாக 'பெண் குழந்தைகள் பாதுகாப்பு' என்னும் பொருண்மையில் விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது. கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கி.வேணுகா தலைமை வகித்தார். துணை முதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி சிறப்புரை ஆற்றினார். உதவிப் பேராசிரியர் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்களான முனைவர் மா.செல்வத்தரசி வரவேற்புரையும், முனைவர் பா.நேருஜி நன்றியுரையும் நல்கினர். உதவிப்பேராசிரியர் முனைவர் பூ.பூங்கோதை இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

ஏப்ரல் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

ஔவை.துரைசாமிப்பிள்ளை
(ஏப்ரல்.3)

பாரதிதாசன்
(ஏப்ரல்.21)

கந்தர்வன்
(ஏப்ரல்.22)

வ.சுப.மாணிக்கம்
(ஏப்ரல்.23)

ரா.பி.சேதுப்பிள்ளை
(ஏப்ரல்.24)

ச.தண்டபாணி தேசிகர்
(ஏப்ரல்.25)

சாலினி இளந்திரையன்
(ஏப்ரல்.28)

உ.வே.சா
(ஏப்ரல்.28)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**
முனைவர் தி.முருகரத்னம்

முனைவர் திரு. **இராம.சுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் கி.வேணுகா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001,TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: **இரா.சதாசிவம்**, 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **செந்தமிழ் அச்சகம்**, 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1